**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING ENVIRONMENTAL CLEARANCE FOR THE ROUGH STONE AND GRAVEL QUARRY OF M/s. P.S.MINES AND MINERALS, S.F. No: 134/1, 134/4, 134/5B, 134/6 and 134/7, PADALUR EAST VILLAGE, ALATHUR TALUK, PERAMBALUR DISTRICT OVER AN EXTENT OF 2.38.0 HECTARES AT M/s. ANBU MAHAL, (OPPOSITE ARUNA PETROL BUNK), PADALUR, ALATHUR TALUK, PERAMBALUR DISTRICT ON 20.12.2024.**

**PRESIDING OFFICERS:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Mr. S. Vaithyanathan | : | Personal Assistant to the District Collector (General), Perambalur District. |
| 2. | Mrs. S. Vijaya Priya | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur District. |
| **PROPRIETOR:** | | | |
| 3. | Mr. P.S.Jayaraman | | **Project-1** M/s. P.S.Mines and Minerals Rough Stone and Gravel Quarry S.F. No. 134/1, 134/4, 134/5B, 134/6 & 134/7, Padalur East Village, Alathur Taluk, Perambalur District. |

The total number of people who attended the meeting, including the Proprietor of the quarry, Government Officials, Environmental Activists and the General Public, was 187. (copy of the attendance register is attached herewith).

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur, said** "Good morning to everyone, Welcome the Personal Assistant to the Collector (General) who presiding over the public hearing meeting for the proposed rough stone and gravel quarry of M/s. P.S. Mines and Minerals, S.F.No. 134/1, 134/4, 134/5B, 134/6 & 134/7, Padalur East Village, Alathur Taluk , Perambalur District and welcomed the

other government officials, the public, volunteers, friends from the press and media and police department on behalf of the Tamil Nadu Pollution Control Board and the Perambalur District Administration.

As the proposed project falls within the quarry cluster of 500m radius, the Public hearing is being held to obtain Environmental Clearance from the State Environmental Impact Assessment Authority and She said that the press release regarding the meeting to be held today has been published 30 days in advance in The New Indian Express English newspaper and Dinamalar Tamil newspaper dated 13.11.2024.

Further, this public hearing meeting has already been advertised through pamphlets, posters and loudspeakers to inform the public living in Padalur East and surrounding villages. The Project Environmental Consultant will explain the proposed projects in detail and after that, the public can register their comments one by one by giving their name and address, and the comments of the public so registered will be recorded in audio and video format and sent to the State Environmental Impact Assessment Authority. Now, the environmental consultant will explain the project description".

**Environmental consultant:**

He welcomed the Personal Assistant to Collector (General), who preside the Public hearing for the proposed stone and gravel quarry project of M/s. P.S. Mines and Minerals and welcomed the District Environmental Engineer, Tahsildar of Alathur, Police Officers and the large gathering of the public.

The proposed stone and gravel quarry project will be located in Padalur East Village, Alathur Taluk, Perambalur District. He informed that notice was published in The New Indian Express and Dinamalar 30 days in advance for this public hearing. He further informed that the Tamil Nadu Pollution Control Board has advertised the project through pamphlets, posters and loudspeakers to inform the public living in the vicinity of Padalur and Alathur. He further explained the Environmental Impact Statement of the project in detail (Photocopy of the project summary is attached).

Following this, the public who attended the public hearing expressed their views as follows.

**1. Mr. R. Raghu, National South Indian Farmers' Association, State Secretary, Padalur**

We have been protesting in Tamil Nadu for sand mining in Cauvery, which is more than 500 km away, for affecting agriculture. But Padalur Panchayat has a radius of only 5 km He said that every mountain has been affected due to its exploitation. He also asked about holding this public meeting in Padalur West instead of Padalur East. The people of Thiruvalakurichi, Padalur East village will be affected by the Operation of a rough stone and gravel quarry of M/s. P.S. Mines and Minerals. He also said that only 50 people from Thiruvalakurichi participated in this public meeting so far. He said that M sand trucks are not covered and it is difficult to cross Padalur on a two-wheeler. He also said that there is water in the lake around Padalur but there is no water in Thiruvalakurichi. He said that the establishment of this quarry will cause water shortage.

**(There was a small commotion, then the meeting continued).**

He said that the people of Padalur Panchayat should be consulted. He said that not only this quarry but all the crushers and quarries around Padalur are affecting People. He also said that government officials get transfer to another cities after working for two/three years and the people of Thiruvalakurichi affected. Considering their livelihood, they will stop if the mountains are broken.

He also said that we will block the Trichy-Chennai highway if quarry is established. He also requested to cancel this project.

**2. Mr. Kathirvel, Therani village.**

He said that villagers need employment opportunities and made complaint that water is not sprayed to control dust during vehicle movement.

He said that there is no job opportunity and mines companies should give jobs to the villagers and encourage the villagers so that Therani Village get benefited otherwise, the quarry could not be permitted.

He also said that every village around Padalur should be provided with employment opportunities for at least 30 people. If not, the quarry should be stopped.

**(There was a small commotion, then the meeting continued).**

{**District Environmental Engineer**: She asked the public to register their opinions one by one.}

{**Personal Assistant to Collector (General)**: He said that everyone's comments can be recorded if they speak one by one.}

**(There was a small commotion, then the meeting continued).**

**3. Mr. Mukilan, Thiruvalakurichi**

He said all crushers should be closed. He said that there are 10 crushers around their village. Due to digging of 2000 feet and 4000 feet of quarry in Padalur there is shortage of drinking water. He said that despite informing the District Collector, no action was taken. He also said that there is no water in the well. He said that the livelihood of the villagers was being affected and also said that the people of Tiruvalakurichi will be affected a lot if the quarry is established. The establishment of the quarry should be stopped and if the quarry is constructed we will shut down every crusher and will block the road.

**(There was a small commotion, then the meeting continued).**

He asked about holding of a public consultation meeting for the quarry to be set up in Thiruvalakurichi in Padalur West. He said that auctioning of all crushers and quarries should be stop.

{**Personal Assistant to Collector (General)**: The word will be recorded clearly, only if the public register their comments clearly and register even if there are alternative comments. All of them will be recorded and sent to Chennai. He said that you should not talk among yourselves and speak one by one, and everyone will be given a chance.}

**4. Mr.Thiruvalakurichi person (Name not mentioned)**

He welcomed the The District Collector's Personal Assistant (General), District Environmental Engineer and the police officers. He said that they had come from Thiruvalakurichi in the hope of accepting the farmers' demands. He also said that the District Collector, Perambalur had come to Thiruvalakurichi for the Gram Sabha and questioned the holding of this public meeting in Padalur West instead of Padalur East. Survey for this quarry was conducted. But the public did not allow it, But the survey was taken illegally. He said

that he spoke to the District Collector in this regard. When the District Collector asked who asked the surveyor to take the survey, he said that it was the Tahsildar. Then when the District Collector asked the Tahsildar, he said that it was for planting saplings. He said that the quarry will destroy the livelihood and that the government officials know that many petitions have been filed regarding the old quarry of this company. He also questioned the government officials about how many hectares and how many quarries are there in Thiruvalakurichi. He said that the town will be severely affected and that we are in a dangerous situation. He said that an earthquake may occur.. He said that water is available only because of monsoon this season. He said that there is water in the lake in Perambalur district and not in Thiruvalakurichi. He also said that there is no water even for birds. He said that if permission is given for this quarry, we will go to any extent.

**5. Mr.Thiruvalakurichi person (Name not mentioned)**

He asked the Village Administrative Officer and the Tahsildar (Alathur) about the current status of the quarry and why the consultation meeting was held today. He also asked how many acres of agricultural land and how many houses are around it.

He said that the quarry will be built and that agriculture will be affected. He asked for an explanation.

{**Environmental Consultant:** Provided details from ppt}

He said that, he has land in S.F.No. 135/B.

He asked whether the public was informed about whether the quarry was dug to the depth allowed after the permit period expired. He said that they had gone beyond the permitted limit. He said that agriculture was being affected.

He said that the quarry in Padalur is digging more than the specified depth and there is a shortage of drinking water.

**(There was a small commotion, then the meeting continued).**

{**District Environmental Engineer:** This meeting is for recording opinions and asked them to register their opinions.}

He asked government officials how many wells were there and how many quarries already existed near this quarry.

**(There was a small commotion, then the meeting continued).**

{**Personal Assistant to Collector (General)**: He said that everyone's comments can be recorded if they speak one by one.}

**(Meeting continued)**

He also said that the establishment of this quarry should be banned as it would affect agriculture and cause water shortage.

He said that the general public does not want a stone quarry and that there is no money to buy water and that all quarries are extracting too much than allowed quantity. He said he wanted a counterargument.

**(There was a small commotion, then the meeting continued).**

{**Police:** He said, that the officers are here to record all your opinions. So everyone were asked to register their opinions without arguing.}

**6. Mr.Vinayagam, Farmer**

He expressed his greetings to the officers, the people and the police officers. He said that in 1986 there was a lot of stream in Tiruvalakurichi and currently no water due to stone digging. He said that farmers are being affected a lot and it is better not to let this quarry to establish. He said that the quarry will be located between Thiruvalakurichi (East) and Therani West, and some people were not informed about this. He also requested that the quarry be stopped.

**7. Mr. Vivek (Sudhanthira Makkal Needhi Katchi)**

He said that a country that destroys nature will go backwards. He said that it was a meeting to express public opinions. Air, water and food were the most basic needs of the people. He asked what the government was doing for the farmers who provide food. He said there was nothing wrong with auctioning off quarries, but they should only dig to a certain depth. He said that mountains are important, And it is not wrong to break down mountains to build houses but they should only dig to a certain depth, when digging beyond that certain depth, the groundwater level will go down and agricultural lands will be affected. He also said that M/s. P.S. Mines and Minerals quarry may be establish when comply to consent quantity, if depth exceeded the limit, we will engage in road blockage.

**(There was a small commotion, then the meeting continued).**

**8. Mr. Ranganathan, Thiruvalakurichi**

He welcomed Mr. Aiyakannu, Advocate. He said that, he has 6 acres of agricultural land at S.F.No. 134/3, 135 and not received any information regarding the establishment of this quarry. Also the old quarry of M/s. P.S. Mines and Minerals in S.F.No. 122/2A had excavated up to 220 feet. He said that the well is affected without water level. Also which affected his 2 wells, it reduced the 30 feet well to 12 feet well. He also said that the people of Thiruvalakurichi who were most affected, only a few numbers joined today and that the affected people of Thiruvalakurichi should be invited.

**(There was a small commotion, then the meeting continued).**

{**District Environmental Engineer**: He asked the public to register their opinions one by one.}

**(Meeting continued)**

He said the total hectare of Thiruvalakurichi is 2 km in circumference. He said that there are 47 quarries in Thiruvalakurichi and they involved in road blockage in this regard and that more than 20 petitions were submitted to the District Collector's Office and Taluk Office. But he said no action was taken. He also said that water was available only due to these seasonal rains. He said that no new quarry should be built. He has his land of S.F.No.134/3, next to the quarry. Therefore, he said that No quarry required in Thiruvalakurichi. He also said that if quarry is established, we will protest.

**9. Mr. Prakash, Thiruvalakurichi**

He said there is water shortage due to the establishment of quarries. He said there is no water in the lake and that drinking water will not be available due to digging beyond the specified level. He also said he could not do agriculture. He said that there are no rocks in the mountains, water is stagnant due to quarrying, lakes are not getting water and people are leaving because there is no water to drink. He said that he has 5 acres of land near S.F.No.134. He also said that water was available only due to the rains of this season. He said that the government is for the service of the public. So, there is no need for a quarry required, he demanded that the existing quarry should be closed.

**10. Mr. Sathish, N.G.O.**

He said that he understand the grievances of the villagers and is supportive. He asked the government officials to adopt this village as soon as possible to develop the village level and improve infrastructure facilities. He also said that trees should be grown in greenery. He said that the plants should be protected. He said that they can avoid water shortage by properly utilising rainwater. He said that there should be employment-oriented schemes for the villagers below the poverty line. He said that what the villagers need and what they do not need should be fulfilled. He said that the CSR Corporation and DMF District assistance should only be beneficial to the people and should be spent only for the development of the people. He said that the villagers' problems should be resolved immediately.

**11. Mr. Thirunavukarasar, Thiruvalakurichi**

He said that everyone knows about the impact of quarries on agriculture and water resources. We are already using RO water for drinking. He said that this is the beginning of destruction. He said that government officials do not respect farmers and support companies. He told those who support this project should eat only money. He said that those who support this project are destroying the human life and that this quarry should not be built.

He said that quarries are digging more than the specified depth, which causes shortage of drinking water and harms natural resources and agriculture. He said that government officials are not taking action. He said that there should be no projects against the people. He said that M/s. P.S.Mines and Minerals quarry should not be set up.

**12. Mr. Raja, Therani, Tamil Nadu Farmer Association, District Vice President/Union Secretary**

He said that pollution is caused by all quarries and crushers operating in violation of the rules. People have filed petitions with the District Collector. He also said that no government officials come and inspect. He said that appropriate action should be taken as the quarries in Padalur are polluting the environment. He said that the vehicles coming out of the quarries are not covered and cause air pollution.

**(There was a small commotion, then the meeting continued).**

He also said that a complaint has been filed. He said that the Tamil Nadu Pollution Control Board and the Mines Department are not taking action. He requested the district administration to take note that all the crushers and quarries are violating the rules.He also said that a petition has been filed. He said that the Tamil Nadu Pollution Control Board and the Mines Department are not taking action. He requested the District Administration to take note on quarries who violating the rules.

**13. Mr. Balaguru, Old Viralipatti, Naam Tamilar Katchi, District Secretary**

He said that the M/s. P.S.Mines and Minerals quarry will destroy the natural resources and the mountains will be affected. He asked why the sand extracted here is sent to the next state, Kerala and Andhra Pradesh. He asked why nature is being depleted here. He also said that if this quarry is established, a protest will be held.

He said that air, food, natural resources are important, and that mountains and land are the property of the government. He asked the officials who they work for and said that the government is for the people. He said that mountain is safe because the temple was built.

**14. Mr. (Name not mentioned)**

He said that anyone who cares about nature can participate and that the government official is not willing to accept the grievanceHe said that a court case will be filed if M/s. P.S. Mines and Minerals quarry is established. He questioned whether the people of that particular area knew about the consultation meeting. He also demanded that the existing quarries should be closed after the completion of project. He said that, government should not give permission for the quarry. No new quarries are needed. He said that groundwater is a problem here. He said that government officials do not take action against quarries that involve in too much excavation. He said on behalf of all the general public that this quarry should not be built. He also said that all the villagers are ready to sign a petition saying that this quarry should not be built. He also demanded that the existing quarries should be closed after reach the permitted depth.

**15. Mr. Ayyakannu, Advocate, Farmer and Chief of the Desiya Thenidhiya Nathigal Inaippu Vivasayigal Sangam., Musiri**

He also said that the quarry near his residence in Kottathur claimed 15 feet deep, but it was dug to a depth of 70 feet. He said that the nearby well had dried up and the trees had dried up.

When informing to the authorities, they said that they would look into it. He said that his residence is on the banks of the Cauvery,Musiri and due to sand mining on the banks of the Cauvery, his 1400 trees had dried up, 10,000 coconut trees had been destroyed and 20,000 palm trees had been destroyed. He said that the problem was in the place where the waterbody was located and there was shortage of water in this village, if the well was dug too deep, would water seep into it and he said it will not. He said that filing a case was of no use. The Supreme Court and the High Court had said that Jallikattu should not be held. But he said that permission was given to hold when 1,00,000 common people protested for Jallikattu. Similarly, he said that if all the villagers come together and protest against the establishment of this quarry, they will consider. Otherwise, the government officials will not pay attention.

He said that due to sand mining on the banks of the Cauvery, water went down to 60 feet, and coconut tree with roots of 15 feet,10 feet deep dried up, and the income from coconut trees Rs. 30,000 per month was at loss. Then he said that in the year 1970s, he earned Rs. 90 from sugarcane farming and government employee, also earned the same salary, but this year he earned Rs. 3100 from sugarcane farming and government employees got paid Rs. 1,00,000. He said that this happened because government employees fought together. Similarly, if the farmers fight together, they can prevent the construction of this quarry. If everyone fights together, they will stop this quarry.

He also said that the establishment of P.S. Mines and Minerals quarry will destroy trees, affect agriculture and people and that this quarry should not be established. He said that the quarries will cause water shortages and destroy agriculture, and then we will have to depend on foreign genetically modified foods. He said that if the quarry is established, the public and farmers will be affected.

He said that the fields near Kotathur have been completely destroyed. He also asked the public at the public consultation whether they wanted the quarry or not. Most of the public who attended the meeting replied not required. Further, he humbly requested to save the Farmers.

**16. Mr. Ramar, Thiruvalakurichi**

He said that the quarry should not be established, as it will cause damage.

**(There was a small commotion, then the meeting continued).**

{**District Environmental Engineer**: He asked the public to record their comments one by one.}

**17. Mr. Jeya Kumar, Therani**

He said that the existing quarries was in unsafe condition to public and he has agricultural field of 5 acres of S.F.No. 121/1, 121/3 in Thiruvalakurichi East, so he refused the proposed quarry.

**(There was a small commotion, then the meeting continued).**

**18. Mr. Thirunavukarasar, Thiruvalakurichi**

He asked public, those opposing the plan to raise their hands and he asked the public to raise their hands to know who are supporting this project. He said that the registry that had signed for the support of this project should be cancelled immediately.

He said that those who opposed the project should be get signed and registered. He wanted to know who are all supporting the project. He said that signatures of those who supported the project should be collected in front of the public.

{**Personal Assistant to Collector (General)**: He explained that this register is an attendance register and not a support for this project.}

**(There was some commotion, then the meeting continued).**

**19. Mr. Mugilan, Thiruvalakkurichi**

The establishment of M/s. P.S.Mines and Minerals Quarry will cause water shortage, livelihood disruption, biodiversity and environmental damage. He also demanded that the project tobe stopped.

**20. Mr. Therani person (Name not mentioned)**

He said that he had already protested and that they would receive petitions and seek opinions but would put the quarry up for auction. He said that water is important and important for all life. He also said that all quarries should be stopped. He also said that they should join hands and protest against the establishment of this project.

**Personal Assistant to Collector (General)**: He asked the public to grow more trees to reduce water scarcity. And said that, As the public has registered their views, all these were recorded and all the audio and video and petitions will be sent to Chennai.

After this, as no public came forward to express their views, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur concluded the meeting by thanking everyone who attended the meeting.

**Enclosures**

1. Copy of attendance register of Public hearing (16 pages 187 members)
2. Project summary Presentation
3. Copy of petitions received during Public hearing-36 Nos.
4. Video recording of public hearing CD

03/02/25

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Perambalur**

3/2/2025

**Personal Assistant to Collector**
**(General),**
**Perambalur**

3/3

**பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், பாடாலூர் கிழக்கு கிராமம், தி/ள். P.S மைன்ஸ் மற்றும் மினரல்ஸ் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி, புல எண்: 134/1, 134/4, 134/5B, 134/6 மற்றும் 134/7 மொத்த பரப்பளவுகளான 2.38.0 ஹெக்டேரில் அமையவுள்ள குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், பாடாலூர், அருணா பெட்ரோல் பங்க் எதிரில் அமைந்துள்ள தி/ள். அன்பு மஹால் திருமண மண்டபத்தில் 20.12.2024 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**தலைமை அதிகாரிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. ச. வைத்தியநாதன் | : | மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது), பெரம்பலூர் மாவட்டம். |
| 2. | திருமதி. சு. விஜயபிரியா | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெரம்பலூர். |
| **நிறுவனத்தினர்** | | | |
| 3. | உரிமையாளர்<br>திரு. P.S. ஜெயராமன் | : | **திட்டம்-1**<br>தி/ள். P.S.மைன்ஸ் மற்றும் மினரல்ஸ் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி புல.எண். 134/1, 134/4, 134/5B, 134/6 & 134/7, பாடாலூர் கிழக்கு (கிராமம்), ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம். |

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர், அரசு அலுவலர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் பொது மக்களின் மொத்த எண்ணிக்கை – 187 ஆகும். (வருகைப் பதிவேட்டின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெரம்பலூர் அவர்கள்,**

"அனைவருக்கும் இனிய காலை வணக்கம், பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், பாடாலூர் கிழக்கு கிராமத்தில் தி/ள். P.S.மைன்ஸ் மற்றும் மினரல்ஸ், புல.எண். 134/1, 134/4, 134/5B, 134/6 &

134/7-ல் 2.38.0 ஹெக்டேரில் அமையவுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்காக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்தித்தர வருகைபுரிந்துள்ள பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் அவர்களையும் ஏனைய அரசுத்துறை அதிகாரிகளையும், பொதுமக்களையும், தன்னார்வளர்களையும், பத்திரிக்கை மற்றும் ஊடகத்துறை நண்பர்கள், காவல் துறை நண்பர்கள் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாகவும், பெரம்பலூர் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும் வருக வருக என்று வரவேற்றார்.

குழுமத்திற்குள் உள்ள குவாரி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு இக்கூட்டமானது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்றும், இன்று நடைபெறும் இக்கூட்டம் குறித்து 13.11.2024 தேயிட்ட தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் மற்றும் தினமலர் தமிழ் செய்தித்தாள் ஆகியவற்றில் 30 நாட்களுக்கு முன்னதாகவே பத்திரிக்கை செய்தி வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

மேலும் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் குறித்து பாடாலூர் கிழக்கு (கிராமம்) மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் வசிக்கும் பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் மற்றும் ஒலிப்பெருக்கி மூலம் ஏற்கனவே விளம்பரம் செய்யப்பட்டுள்ளது என்றும் முன்மொழியப்பட்ட இத்திட்டங்கள் குறித்து திட்ட சுற்றுச்சூழல் ஆலோசகர் அவர்கள் விரிவாக எடுத்துரைப்பார்கள்என்றும் அதன் பின்னர் பொது மக்கள் ஒவ்வொருவராக தங்களுடைய பெயர் மற்றும் முகவரியை தெரிவித்துவிட்டு தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்யலாம் என்றும், அவ்வாறு பதிவு செய்யப்படும் பொதுமக்களின் கருத்துக்கள் ஒலி மற்றும் ஒளி வடிவில் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவித்தார்கள். தற்போது சுற்றுச்சூழல் ஆலோசகர் அவர்கள் திட்ட விளக்கம் குறித்து எடுத்துரைப்பார்கள்" என்றும் கூறினார்.

**சுற்றுச்சூழல் ஆலோசகரின் உரை**

திரு. P.S.மைன்ஸ் மற்றும் மினரல்ஸ் அவர்களின் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்திற்கு நடைபெறும் பொதுமக்களின் கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்த வருகைபுரிந்துள்ள மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களையும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களையும், ஆலத்தூர் வட்டாட்சியர் அவர்களையும், காவல்துறை அதிகாரிகள் அவர்கள் மற்றும் திரளாக கூடியிருக்கும் பொதுமக்களையும் வரவேற்றார்.

இந்த முன்மொழியப்பட்ட சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டமானது பாடாலூர் கிழக்கு (கிராமம்), ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டத்தில் அமையவுள்ளது. இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்காக 30 நாட்களுக்கு முன்பே தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினமலர் நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டது என்று தெரிவித்தார். மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் பாடாலூர் ஆலத்தூர் சுற்று வட்டாரத்தில் வசிக்கும் பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் மற்றும் ஒலிப்பெருக்கி மூலம் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். மேலும் இத்திட்டத்தின் சுற்றுச்சூழல் திட்ட அறிக்கையை பற்றி விரிவாக விளக்கிக் கூறினார் (திட்டச்சுருக்கத்தின் ஒளி நகல் இணைக்கப்பட்டுள்ளது).

இதைத் தொடர்ந்து கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்தார்கள்.

**1. திரு. R. ரகு, தேசிய தென்னிந்திய விவசாய சங்கம், மாநில செயலாளர், பாடாலூர்**

500கி.மீ க்கும் தொலைவில் உள்ள காவிரியில் மணல் எடுப்பதால் விவசாயம் பாதிப்பு அடைகிறது என்று தமிழக அளவில் மிகப்பெரிய போராட்டம் செய்திருக்கின்றோம். ஆனால், பாடாலூர் பஞ்சாயத்தானது 5கி.மீ சுற்றளவு கொண்டது. ஒவ்வொரு மலைகளையும் வெடித்து பாதிப்பு ஏற்படுத்துவதாக கூறினார். மேலும் இந்த பொது மக்கள் கூட்டத்தினை பாடாலூர் கிழக்கு

பகுதியில் நடைபெறாமல் பாடாலூர் மேற்கில் நடத்துவது குறித்து கேள்வி கேட்டார். திரு. P.S.மைன்ஸ் மற்றும் மினரல்ஸ் அவர்களின் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி அமையவுள்ளதால் பாடாலூர் கிழக்கு கிராமத்தில் உள்ள திருவளக்குறிச்சி மக்கள் பாதிப்பு அடைவார்கள். தற்பொழுது இக்கருத்து கேட்புக் கூட்டத்தில் 50 திருவளக்குறிச்சி நபர் மட்டுமே கலந்துகொண்டதாகவும் கூறினார். M sand லாரிகள் மூடப்படாமல் செல்கின்றன, இருசக்கர வாகனத்தில் பாடாலூரைக் கடப்பது கடினம் என்றார். மேலும் பாடாலூர் சுற்றி ஏரியில் தண்ணீர் உள்ளதாகவும் திருவளக்குறிச்சியில் தண்ணீர் இல்லை என்பதையும் கூறினார். இக்குவாரி அமைவதால் நீர் பற்றாக்குறை ஏற்படும் என்றார்.

**(சிறு சலசலப்பு ஏற்பட்டது, பிறகு கூட்டம் தொடர்ந்தது).**

பாடாலூர் பஞ்சாயத்து மக்களிடம் கருத்து கேட்க வேண்டும் என்று கூறினார். இந்த குவாரி மட்டும் இல்லாமல் பாடாலூரைச் சுற்றியுள்ள அனைத்து கிரஷர் மற்றும் குவாரிகளாலும் பாதிப்பு ஏற்படுவதாக கூறினார். மேலும் அரசு அதிகாரிகள் இரண்டு மற்றும் மூன்று ஆண்டு வேலை செய்து வெளியூர் செல்கிறார்கள் என்றும் திருவளக்குறிச்சி மக்கள் பாதிப்பு அடைவதாகவும் கூறினார். தங்களுடைய வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, மலைகளை உடைத்தால் தடுப்போம் என்றார்.

மேலும் இக்குவாரி அமைந்தால் திருச்சி-சென்னை நெடுஞ்சாலையை முடக்குவோம் என்றார். இத்திட்டத்தினை ரத்து செய்ய வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

**2. திரு. கதிர்வேல், தெரணி கிராமம்.**

கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு வேண்டும், வாகன போக்குவரத்தின் போது தூசியைக் கட்டுப்படுத்த தண்ணீர் தெளிக்கப்படுவதில்லை என்றார். வேலை வாய்ப்பு இல்லை என்பதையும் தெரணி கிராமம் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் மைன்ஸ் நிறுவனத்தினர் கிராம மக்களுக்கு வேலை கொடுத்து கிராம மக்களை ஊக்குவிக்க வேண்டும் என்றும் கூறினார்.

மேலும் பாடாலூர் சுற்றியுள்ள ஒவ்வொரு ஊ ருக்கும் குறைந்தபட்ச 30 நபர்களுக்காகவாது வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்றார். இல்லை என்றால் குவாரியை நிறுத்துங்கள் என்று கூறினார்.

**(சிறு சலசலப்பு ஏற்பட்டது, பிறகு கூட்டம் தொடர்ந்தது).**

{**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**: பொதுமக்கள் ஒவ்வொருவராக கருத்துகளை பதிவு செய்யும்படி கூறினார்.}

{**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)**: ஒவ்வொருவராக பேசினால் அனைவரின் கருத்துகளும் பதிவு செய்யலாம் என்று தெரிவித்தார்.}

**(சிறு சலசலப்பு ஏற்பட்டது, பிறகு கூட்டம் தொடர்ந்தது).**

**3. திரு. முகிலன், திருவளக்குறிச்சி**

கிரஷர்கள் அனைத்தையும் மூட வேண்டும் என்றார். எங்கள் ஊரைச் சுற்றி 10 கிரஷர்கள் இருப்பதாக கூறினார். பாடாலூரில் உள்ள குவாரி 2000 அடி, 4000 அடி தோண்டுவதால் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. மாவட்ட ஆட்சியரிடம் தெரிவித்தும் எந்த ஒரு நடவடிக்கையும் இல்லை என்றார். கேணியில் தண்ணீர் இல்லை என்றும் கூறினார். கிராம மக்களின் வாழ்வாதாரம் பாதிப்பு அடைகிறது என்றும், மேலும் இக்குவாரி அமைந்தால் திருவளக்குறிச்சி மக்கள் மிகவும் பாதிப்பு அடைவார்கள் என்றும் இக்குவாரி அமைவதை நிறுத்த வேண்டும் என்றும் மேலும் இக்குவாரி அமைந்தால் ஒவ்வொரு கிரஷர்களையும் மூடிவிடுவோம் என்றும் சாலை மறியல் செய்வோம் என்றும் கூறினார்.

**(சிறு சலசலப்பு ஏற்பட்டது, பிறகு கூட்டம் தொடர்ந்தது).**

திருவளக்குறிச்சியில் அமையவுள்ள குவாரிக்கான பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தினை பாடாலூர் மேற்கில் நடத்துவது குறித்து கேள்வி கேட்டார். அனைத்து கிரஷர் மற்றும் குவாரிகளுக்கு ஏலம் விடுவதை நிறுத்த வேண்டும் என்று கூறினார். இக்குவாரி அமைந்தால்

ஒவ்வொரு கிரஷர்களையும் மூடிவிடுவோம் என்றும் சாலை மறியல் செய்வோம் என்றும் கூறினார்.

{**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)**: பொதுமக்கள் தெளிவாக கருத்துகளை பதிவு செய்தால்தான் அந்த வார்த்தை தெளிவாக பதிவு செய்யப்படும் என்றும் மாற்று கருத்துகள் இருந்தாலும் பதிவு செய்யுங்கள். அவை அனைத்தும் பதிவு செய்யப்பட்டு சென்னைக்கு அனுப்பப்படும் என்றார். நீங்கள் உங்களுக்குள் பேசி கொள்ளாமல் ஒவ்வொருவராக பேசுங்கள், அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்படும் என்று கூறினார்.}

**4. திரு. திருவளக்குறிச்சி** நபர். **(பெயர் தெரிவிக்கவில்லை)**

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களையும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களையும், காவல்துறை அவர்களையும் வரவேற்றார். விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்க ஏற்போம் என்ற நம்பிக்கையில் திருவளக்குறிச்சியில் இருந்து வந்திருக்கிறோம் என்று கூறினார். மேலும் கிராம சபைக்காக மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர் அவர்கள் திருவளக்குறிச்சி வந்தார் என்றார், இந்த பொது மக்கள் கூட்டத்தினை பாடாலூர் கிழக்கு பகுதியில் நடைபெறாமல் பாடாலூர் மேற்கில் நடத்துவது குறித்து கேள்வி கேட்டார். இக்குவாரிக்கான சர்வே நடைப்பெற்றது. ஆனால் பொதுமக்கள் அதற்கு அனுமதிக்கவில்லை. ஆனால் சட்ட விரோதமாக சர்வே எடுக்கப்பட்டது. இதன் தொடர்பாக மாவட்ட ஆட்சியரிடம் பேசினார் என்றார். மாவட்ட ஆட்சியர் சர்வையரை யார் சர்வே எடுக்க சொன்னார் என்று கேட்ட பொழுது தாசில்தார் என்றார். பின் தாசில்தாரை மாவட்ட ஆட்சியர் கேட்கும்பொழுது இது மரக்கன்று நடுவதற்கு என்று கூறினார் என்றார். குவாரி அமையவுள்ளதால் வாழ்வாதாரம் அழியும் என்றும், இந்த நிறுவனத்தின் பழைய குவாரி தொடர்பாக அதிக மனுக்கள் கொடுத்தது அரசு அதிகாரிகளுக்கு தெரியும் என்றார். மேலும் திருவளக்குறிச்சி எத்தனை ஹெக்டேர், எத்தனை குவாரி பற்றிய விவரம் குறித்து அரசு அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பினார். இதனால் ஊர் மிகவும் பாதிப்பு அடையும் என்றும், அபாய கட்டத்தில் உள்ளோம் என்று கூறினார். பூகம்பம் வரக்கூடும்

என்றார். இப்பருவ நிலை மழையினால் மட்டுமே நீர் கிடைத்துள்ளது என்றார். பெரம்பலூர் மாவட்டத்தில் ஏரியில் தண்ணீர் உள்ளது என்றும் திருவளக்குறிச்சியில் இல்லை என்றும் கூறினார். மேலும் பறவைகளுக்கு கூட தண்ணீர் இல்லை என்று கூறினார். இக்குவாரிக்கு அனுமதி கொடுத்தால், எந்த நிலைக்கும் செல்வோம் என்று கூறினார்.

**5. திரு. திருவளக்குறிச்சி** நபர். **(பெயர் தெரிவிக்கவில்லை)**

குவாரியின் தற்போதைய நிலை என்ன என்றும், இன்றைக்கு ஏன் கருத்து கேட்புக் கூட்டம் நடத்த வேண்டும் என்று கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தாசில்தாரிடம் கேள்வி கேட்டார். மேலும் எத்தனை ஏக்கர் விவசாய நிலம், எத்தனை வீடு சுற்றியுள்ளது பற்றி கேட்டார்.

கல் குவாரி அமையவுள்ள இடத்தை பார்த்துள்ளீர்களா என்றும் விவசாயம் பாதிப்பு ஏற்படுவதாக தெரிவித்தார். விளக்கம் தெரிவிக்க வேண்டினார்.

{**சுற்றுச்சூழல் ஆலோசக**ர்: விபரம் தெரிவித்தார். Satellite image}

புல எண். 135B-அவரது நிலம் என்றார்.

கல்குவாரி அனுமதி காலம் முடிந்த பின்னர் அனுமதி கொடுக்கப்பட்ட அளவிற்குதான் ஆழம் தோண்டினார்களா என்பது பற்றி பொது மக்களிடம் கூறினீர்களா என்று கேட்டார். அளவுக்கு மீறிதான் எடுத்துள்ளார்கள் என்றார். விவசாயம் பாதிப்பு ஏற்படுகிறது என்றார்.

பாடாலூரில் உள்ள குவாரி குறிப்பிட்ட அளவினைவிட அதிகமான அடி தோண்டுவதால் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகிறது என்றார்.

**(சிறு சலசலப்பு ஏற்பட்டது, பிறகு கூட்டம் தொடர்ந்தது).**

{**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**: இக்கூட்டம் கருத்துகளை பதிவு செய்வதற்கானது என்றும் தங்கள் கருத்துகளை பதிவு செய்யும்படி கூறினார்.}

எத்தனை கிணறு உள்ளது என்றும், இக்குவாரிக்கு அருகில் ஏற்கனவே எத்தனை குவாரிகள் உள்ளன என்பதை பற்றி அரசு அதிகாரிகளிடம் கேட்டார்.

**(சிறு சலசலப்பு ஏற்பட்டது, பிறகு கூட்டம் தொடர்ந்தது).**

{**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)**: ஒவ்வொருவராக பேசினால் அனைவரின் கருத்துகளும் பதிவு செய்யலாம் என்று தெரிவித்தார்.}

**(கூட்டம் தொடர்ந்தது)**

மேலும் விவசாயம் பாதிப்பு அடைவதாலும், நீர் பற்றாக்குறை ஏற்படுவதாலும் இக்குவாரி அமைவதை தடை செய்ய வேண்டும் என்று கூறினார்.

கல் குவாரி வேண்டாம் என்பது பொது மக்கள் கருத்து என்றும் தண்ணீர் வாங்கவே காசு இல்லை என்றும் அனைத்து குவாரிகளும் அளவுக்கு அதிகமாக எடுப்பதாக கூறினார். எதிர்வாதம் வேண்டும் என்றார்.

**(சிறு சலசலப்பு ஏற்பட்டது, பிறகு கூட்டம் தொடர்ந்தது).**

{**காவல்துறை**: உங்கள் அனைத்து கருத்துகளும் பதிவு செய்வதற்காகத்தான் அதிகாரிகள் வந்து இருக்கிறார்கள். ஆகவே அனைவரும் விவாதிக்காமல் கருத்துகளை பதிவு செய்யும்படி கூறினார்.}

**6. திரு. விநாயகம், விவசாயி**

அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் போலீஸ் அதிகாரிகளுக்கும் வணக்கத்தைத் தெரிவித்தார். 1986ல் திருவளக்குறிச்சியில் நிறைய நீரோடை இருந்ததாகவும், கல் தோண்டி எடுப்பதால் தற்போது நீர் இல்லை என்று கூறினார். விவசாயிகள் மிகவும் பாதிப்பு அடைவதாகவும், இந்த ஏலத்தை விடாமல் இருப்பது நல்லது என்று கூறினார். குவாரி திருவளக்குறிச்சி (கிழக்கு) மற்றும் தெரணி மேற்கு இடையில் அமையவுள்ளதாகவும், சில மக்களுக்கு இது குறித்து

தெரியப்படுத்தப்படவில்லை என்றார். மேலும் கல்குவாரியை நிறுத்த வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்.

**7. திரு. விவேக் (சுதந்திர மக்கள் நீதி கட்சி)**

இயற்கை அழிக்கும் நாடு பின்னோக்கி போகும் என்றார். பொதுமக்கள் கருத்துகளை தெரிவிக்கும் கூட்டம் என்றும், காற்று, நீர், உணவு ஆகியவை மக்களுக்கு மிகவும் அடிப்படையான தேவைகள் என்று கூறினார். உணவு அளிக்கும் விவசாயிகளுக்கு அரசாங்கம் என்ன செய்கிறது என்று கேட்டார். குவாரிகளை ஏலம் விடுவது தப்பு இல்லை என்றும் ஆனால் குறிப்பிட்ட ஆழம் மட்டுமே தோண்ட வேண்டும் என்று கூறினார். மேலும் மலைகள் முக்கியம் என்றார். மேலும் வீடு கட்டுவதற்கு மலை உடைப்பது தப்பு இல்லை என்றும் ஆனால் அதனை குறிப்பிட்ட ஆழம் மட்டும் தோண்ட வேண்டும் என்றும் கூறினார். குறிப்பிட்ட ஆழத்திற்கு மேல் தோண்டும் போது நிலத்தடி நீர்மட்டம் கீழே போகும் என்றும் விவசாய நிலங்கள் பாதிக்கப்படும் என்றும் கூறினார். மேலும் குறிப்பிட்ட ஆழம் தோண்டினால் தி/ள். P.S.மைன்ஸ் மற்றும் மினரல்ஸ் குவாரி அமையலாம் என்றும் குறிப்பிட்ட ஆழத்தினை மீறும் போது சாலை மறியலில் ஈடுபடுவோம் என்றும் கூறினார்.

**(சிறு சலசலப்பு ஏற்பட்டது, பிறகு கூட்டம் தொடர்ந்தது).**

**8. திரு. ரங்கநாதன், திருவளக்குறிச்சி**

திரு. ஐயாக்கண்ணு, வழக்கறிஞர், அவர்களை வரவேற்றார். இவரது நிலமான புல எண். 134/3, 135 ல் 6 ஏக்கரில் விவசாயம் நிலம் உள்ளது என்று கூறினார். மேலும் இக்குவாரி அமைவதை தொடர்ந்து இவருக்கு இதன் தொடர்பாக எந்த தகவல்களும் கிடைக்கவில்லை என்று கூறினார். மேலும் தி/ள். P.S.மைன்ஸ் மற்றும் மினரல்ஸ்-ன் பழைய குவாரியான புல எண். 122/2A-ல் 220 அடி தோண்டப்பட்டுள்ளது. நீர் மட்டம் இல்லாமல் கிணறு பாதிப்பு ஏற்படுகிறது என்றார். மேலும் இவரது 2 கிணறுகள் பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறினார். பின் இவரது 30 அடி கிணறானது 12 அடி கிணறாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இக்கூட்டத்திற்கு பாதிப்பு அடைந்த திருவளக்குறிச்சி மக்கள்

குறைவாகவே கலந்துள்ளனர் என்றும் பாதிக்கப்பட்ட திருவளக்குறிச்சி மக்களை அழைக்க வேண்டும் என்று கூறினார்.

**(சிறு சலசலப்பு ஏற்பட்டது, பிறகு கூட்டம் தொடர்ந்தது).**

{**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**: பொதுமக்கள் ஒவ்வொருவராக கருத்துகளை பதிவு செய்யும்படி கூறினார்.}

**(கூட்டம் தொடர்ந்தது)**

திருவளக்குறிச்சியின் மொத்த ஹெக்டேர் 2கி.மீ சுற்றளவு என்றார். திருவளக்குறிச்சியில் 47 குவாரி இருக்கின்றன எனவும் இதன் தொடர்பாக சாலை மறியல் நடந்ததாகவும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தாலுகா அலுவலகம் ஆகிய இடங்களில் 20 முறைக்கும் மேற்பட்டு மனு கொடுத்ததாகவும் கூறினார். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறினார். மேலும், இப்பருவ நிலை மழையினால் மட்டுமே நீர் கிடைத்தது எனவும் கூறினார். புது குவாரி அமைய வேண்டாம் என்று கூறினார். அவரது இடம் குவாரியின் பக்கத்தில் 134/3ல் உள்ளது. எனவே திருவளக்குறிச்சியில் குவாரி வேண்டாம் என்று கூறினார். மேலும் குவாரி அமைந்தால் உயிர் போகும்வரை போராட்டம் நடத்துவோம் என்றார்.

**9. திரு.பிரகாஷ், திருவளக்குறிச்சி**

குவாரிகள் அமைவதால் நீர் பற்றாக்குறை ஏற்படுகிறது என்றார். ஏரியில் நீர் இல்லை எனவும், குறிப்பிட்ட அளவினை விட தோண்டுவதால் குடிநீர் கிடைக்காது என்றார். மேலும் விவசாயம் செய்ய முடியாது என்று கூறினார். மலைகளில் பாறைகள் இல்லை எனவும், குவாரிகளில் கல் எடுப்பதால் தண்ணீர் தேங்குகிறது, ஏரிகளுக்கு நீர் வருவதில்லை எனவும், குடிக்க தண்ணீர் இல்லாததால் மக்கள் வெளியேறுகிறார் எனக் கூறினார். புல எண். 134 அருகில் அவரது 5 ஏக்கர் நிலம் உள்ளது என்று கூறினார். மேலும், இப்பருவ நிலை மழையினால் மட்டுமே நீர் கிடைத்தது எனவும் கூறினார். அரசு, பொதுமக்கள் சேவைக்காகவே என்று கூறினார். எனவே குவாரி தேவையில்லை, இருக்கும் குவாரியை மூட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

**10. திரு. சதீஷ், N.G.O.**

கிராம மக்கள் குறைகளை சரியாக புரிந்துகொண்டு ஆதரவாக இருக்கிறார் என்றார். இந்த கிராம நிலை வளர்ச்சி அடையவும், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் கூடிய விரைவில் இந்த கிராமத் தத்தெடுக்க வேண்டும் என்று அரசு அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார். மேலும்

பசுமையாக மரங்களை வளர்க்க வேண்டும் என்று கூறினார். செடிகளை பாதுகாக்க வேண்டும் என்றும் மழைநீரை சேமிப்பதால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாது என்றார். வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு சார்ந்த திட்டங்கள் வேண்டும் என்று கூறினார். கிராம மக்களுக்கு எது தேவை, எது தேவையில்லை என்பதை அறிந்து பூர்த்தி செய்ய வேண்டும் என்று கூறினார். CSR Corporation மற்றும் DMF மாவட்ட உதவிகள் மக்களுக்கு மட்டுமே சாதகமாக இருக்க வேண்டும் என்றும் மக்கள் வளர்ச்சிகாக மட்டுமே செலவு செய்திட வேண்டும் என்றும் கூறினார். கிராம மக்கள் பிரச்சனைகளை உடனடியாக தீர்க்க வேண்டும் என்று கூறினார்.

**11. திரு. திருநாவுக்கரசர், திருவளக்குறிச்சி**

கல்குவாரிகளால் ஏற்படும் பாதிப்பு, விவசாயம் மற்றும் நீர்நிலை பாதிப்பு பற்றி அனைவருக்கும் தெரியும் என்று கூறினார். தற்பொழுதே குடிநீருக்காக நாம் RO நீரை பயன்படுத்துகின்றோம். இது அழிவின் ஆரம்பம் என்று கூறினார். அரசு அதிகாரிகள் விவசாயிகளை மதிப்பதில்லை, நிறுவனங்களுக்கு துணைசெல்வதாகக் கூறினார். இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்போரை பணத்தை சாப்பிட சொல்லி கூறினார். இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்போர் மனித குள அழிவு ஏற்படுத்துபவர் என்றும் இக்கல்குவாரி வேண்டாம் என்றும் கூறினார்.

குவாரிகள் குறிப்பிட்ட அளவினைவிட அதிகமான அடி தோண்டுவதால் குடிநீர் பற்றாக்குறை மற்றும் இயற்கை வளங்கள், விவசாயம் பாதிப்பு ஏற்படுகிறது என்று கூறினார். அரசு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்வதில்லை என்று தெரிவித்தார். மக்களுக்கு எதிரான திட்டங்கள் வேண்டாம் என்று கூறினார். தி/ள். P.S.மைன்ஸ் மற்றும் மினரல்ஸ் குவாரி அமைய வேண்டாம் என்று கூறினார்.

**12. திரு. ராஜா, தெரணி, தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட துணை தலைவர்/ஒன்றிய செயலாளர்**

அனைத்து குவாரி, கிரஷர்கள் விதிமுறை மீறி செயல்படுவதால் மாசு ஏற்படுகிறது என்று கூறினார். மாவட்ட ஆட்சியரிடம் மக்கள் மனுக்கள் கொடுத்தனர். மேலும் அரசு அதிகாரிகள்

யாரும் வந்து ஆய்வு செய்வதில்லை என்று கூறினார். பாடாலூரில் உள்ள குவாரிகள், சுற்றுச்சூழல் மாசுபடுவதால் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார். குவாரிகளில் இருந்து வெளியே வரும் வாகனங்கள் மூடப்படாமல் வருவதாகவும் காற்று மாசு ஏற்படுவதாகவும் கூறினார்.

**(சிறு சலசலப்பு ஏற்பட்டது, பிறகு கூட்டம் தொடர்ந்தது).**

புகார் மனு கொடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மைன்ஸ் துறை நடவடிக்கை எடுப்பதில்லை என்றார். அனைத்து கிரசர், குவாரிகள் விதியை மீறுவதாகவும் மாவட்ட நிர்வாகம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டினார்.

**13. திரு. பாலகுரு, பழைய விராலிப்பட்டி, நாம் தமிழர் கட்சி, மாவட்ட செயலாலர்**

தி/ள். P.S.மைன்ஸ் மற்றும் மினரல்ஸ் குவாரி அமையவுள்ளதால் இயற்கை வளங்கள் அழியக்கூடும் என்றும் மலைகள் பாதிக்கப்படும் என்றார். இங்கே எடுக்கப்படும் மணல் ஏன் அடுத்த மாநிலமான கேரளா, ஆந்திராவுக்கு அனுப்பப்படுகிறது என்று கேட்டார். இங்கே ஏன் இயற்கை அழிக்கப்படுகிறது என்று கேட்டார். மேலும் இந்நிறுவனம் அமைந்தால் போராட்டம் நடத்தப்படும் என்று கூறினார். காற்று, உணவு, இயற்கை வளம், ஆகியவை முக்கியம் என்றும், மலை, பூமி ஆகியவை அரசாங்கம் சொத்து என்றும் கூறினார். யாருக்காக வேலை செய்கிறார்கள் என்று அதிகாரிகளிடம் கேட்டார். மக்களுக்கு அரசாங்கம் என்று கூறினார். கோவில் கட்டியதால் மலை பாதுகாப்பாக அமைந்துள்ளது என்று கூறினார்.

**14. திரு. (பெயர் தெரிவிக்கவில்லை)**

இயற்கை மீது அக்கரை உள்ளவர் யார் வேண்டுமானாலும் பங்கேற்கலாம் என்றும் குறையை ஏற்றுக்கொள்ள அரசு அதிகாரிக்கு மனம் இல்லை என்றும் கூறினார். தி/ள். P.S.மைன்ஸ் மற்றும் மினரல்ஸ் குவாரி அமைந்தால் நீதிமன்ற வழக்கு தொடுக்கப்படும் என்றார். அந்தக் குறிப்பிட்ட பகுதிமக்களுக்கு கருத்து கேட்புக் கூட்டம் பற்றி தெரிந்ததா என்று கேள்வி எழுப்பினார். நடப்பிலுள்ள கல்குவாரியின் அளவீடு முடிந்த பின் குவாரிகளை மூட வேண்டும்

என்றார். இந்த அரசாங்கம் கல் குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று கூறினார். புதிய கல்குவாரிகள் ஏதும் வேண்டாம். இங்கு நிலத்தடி நீர் பிரச்சனையாக உள்ளது என்று கூறினார். அளவுக்கு அதிகமாக எடுக்கும் குவாரிக்கு அரசு அலுவலர்கள் நடவடிக்கை எடுப்பதில்லை என்று கூறினார். மேலும் அனைத்து கிராம மக்கள் சார்பாகவும் அனைத்து பொது மக்கள் சார்பாகவும் இக்குவாரி வேண்டாம் என்று கூறினார். மேலும் இக்குவாரி வேண்டாம் என்பதற்கு அனைத்து கிராம மக்களும் கையெழுத்து போடுவதற்கு தயாராக உள்ளோம் கூறினார். மேலும் நடப்பிலுள்ள கல்குவாரியின் அளவீடு முடிந்த பின் குவாரிகளை மூட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

**15. திரு. அய்யாக்கண்ணு, வழக்கறிஞர், தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயின் சங்க நிறுவனர் மற்றும் தலைவர், முசிறி**

அவர் வசிக்கும் இடத்தில் அருகில் கோட்டாத்தூரில் கல்குவாரி 15 அடி ஆழம் என்று கூறி 70அடி ஆழம் தோண்டப்பட்டுள்ளது என்றார். அருகிலுள்ள கிணறு வற்றியது, மரங்கள் காய்ந்தது என்று கூறினார். அதிகாரிகளிடம் சொன்னால் பார்க்கிறேன் என்றனர். அவர் வசிக்கும் இடம் காவிரி கரை முசிறி, காவிரி கரையில் மணல் அள்ளுவதால் அவரது 1400 மரங்கள் காய்ந்தது என்றும், 10,000 தென்னைமரங்கள் அழிந்ததாகவும், 20,000 பனைமரம் அழிந்ததாகவும் கூறினார். தண்ணீர் அமைந்துள்ள அந்த இடத்திலே பிரச்சனை உள்ளது என்றும் இக்கிராமத்தில் தண்ணீர் பற்றாக்குறை இருப்பதோடு இங்கு அதிக ஆழம் வெட்டினால் கிணற்றில் தண்ணீர் ஊறுமா என்று கேட்டு ஊராது என்று கூறினார். வழக்கு தொடுத்தும் பயனில்லை. ஜல்லிக்கட்டு நடத்த கூடாது என்று உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றது கூறியது. ஆனால் 1,00,000 பொது மக்கள் ஜல்லிக்கட்டு நடத்த வேண்டும் என்று போராட்டம் செய்ததால் ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி கொடுக்கப்பட்டது என்று கூறினார். அதுபோல கிராம பொதுமக்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து இக்குவாரி அமைய வேண்டாம் என்று போராட்டம் நடத்தினால் மரியாதை கிடைக்கும் என்றார். இல்லை என்றால் அரசு அதிகாரிகள் கவனிக்கமாட்டார்கள் என்று கூறினார். காவிரி கரையில் மணல் அள்ளுவதால் 15 அடி, 10அடி தென்னை மர வேர், 60அடி ஆழம்

தண்ணீர் போனதும் மரங்கள் காய்ந்தது என்றும் தென்னைமரங்கள் வருமானம் மாதம் ரூ.30,00.. இல்லை என்று கூறினார். பின் அவர் 1970-ல் கரும்பு விவசாயத்தில் ரூ.90 வருமானம் என்றும் அவரது அரசு ஊழியர் சொந்தக்காரருக்கும் அதே ஊதியம் என்றும் ஆனால் இந்த ஆண்டு இவருக்கு கரும்பு விவசாயத்தில் ரூ.3100-ம் மற்றும் அரசு ஊழியருக்கு 1,00,000 வருமானம் என்று கூறினார். இதனை அரசு ஊழியர்கள் ஒன்று சேர்ந்து போராடியதால் ஏற்பட்டது என்றார். அதுபோல விவசாயிகள் ஒன்று சேர்ந்து போராடினால் இக்குவாரி அமையவுள்ளதை தடுக்கலாம் என்றார். அனைவரும் ஒன்று சேர்ந்து போராடினால் இக்குவாரி அமையாது என்றார். மேலும் இக்குவாரியான தி/ள். P.S.மைன்ஸ் மற்றும் மினரல்ஸ் குவாரி அமைவதால் மரங்கள் அழியும், விவசாயம் மற்றும் மக்கள் பாதிப்பு அடைவார்கள் என்றும் இக்குவாரி அமைய வேண்டாம் என்றும் கூறினார். குவாரிகளால் நீர் பற்றாக்குறை ஏற்பட்டு விவசாயம் அழிந்தும் பின் உணவிற்காக வெளிநாட்டு மரபு மாற்றப்பட்ட உணவிற்காக சார்ந்து இருக்க வேண்டும் என்று கூறினார். குவாரி அமைந்தால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பாதிப்பு அடைவார்கள் என்றார்.

கோட்டாத்தூர் அருகில் உள்ள வயல்கள் சுத்தமாக அழிந்துவிட்டது என்றார். மேலும் அவர் அக்கருத்து கேட்புக் கூட்டத்தில் இக்குவாரி வேண்டுமா வேண்டாமா என்ற கேள்வி கேட்டார். அக்கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலான பொதுமக்கள் வேண்டாம் என்று கூறினார்கள். மேலும் விவசாயிகளைக் காப்பாற்ற தாழ்மையுடன் வேண்டிக் கேட்டுக் கொண்டார்

**16. திரு. ராமர், திருவளக்குறிச்சி**

கல்குவாரி அமையக்கூடாது, அதனால் பாதிப்பு ஏற்படும் என்று கூறினார்.

**(சிறு சலசலப்பு ஏற்பட்டது, பிறகு கூட்டம் தொடர்ந்தது).**

{**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:** பொதுமக்கள் ஒவ்வொருவராக கருத்துகளை பதிவு செய்யும்படி கூறினார்.}

17. திரு. ஜெய்குமார், தெரணி

திருவளக்குறிச்சி கிழக்கில் தனக்கு நிலம் இருக்கிறது. ஏற்கனவே உள்ள குவாரி பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாகவும், புல எண் 121/1, 121/3ல் 5 ஏக்கரில் வயல் உள்ளதாகவும், அதனால் குவாரிக்கு மறுப்பு தெரிவித்தார்.

(சிறு சலசலப்பு ஏற்பட்டது, பிறகு கூட்டம் தொடர்ந்தது).

18. திரு. திருநாவுக்கரசர், திருவளக்குறிச்சி

இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களை கை உயர்த்துமாறு கூறினார். இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பவர்களை கை உயர்த்துமாறு பொதுமக்களை நோக்கி கேள்வி எழுப்பினார். இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கையெழுத்திட்ட பதிவேடை தற்பொழுதே ரத்து செய்ய வேண்டும் என்று கூறினார். இத்திட்டத்திற்கு எதிர்ப்பு கூறியவர்களை பதிவு செய்ய வேண்டும் என்று கூறினார். இத்திட்டத்திற்கு ஆதரவு செய்தவர்கள் யாரென்று தெரிய வேண்டும் என்று கூறினார். பொது மக்களின் முன்னிலையில் இத்திட்டத்திற்கு ஆதரவு செய்பவர்களின் கையெழுத்தை வாங்க வேண்டும் என்றார்.

{மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது): பதிவேடு ஆனது இத்திட்டத்திற்கான ஆதரவு பதிவேடு இல்லை என்றும் அது வருகைப்பதிவேடு என்று விளக்கம் கூறினார்.}

(சிறு சலசலப்பு ஏற்பட்டது, பிறகு கூட்டம் தொடர்ந்தது).

19. திரு. முகிலன், திருவளக்குறிச்சி

தி/ள். P.S.மைன்ஸ் மற்றும் மினரல்ஸ் குவாரி அமைவதால் நீர் பற்றாக்குறை, வாழ்வாதாரம் பாதிப்பு, உயிரினம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என்றார். மேலும் இத்திட்டத்தினை நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

20. திரு.தெரணி நபர் (பெயர் தெரிவிக்கவில்லை)

ஏற்கனவே போராட்டம் செய்ததாகவும், மனு பெற்றுக்கொள்வார்கள், கருத்து கேட்பார்கள் ஆனால் குவாரியை ஏலத்திற்கு விடுவார்கள் என்று கூறினார். தண்ணீர் முக்கியம் என்றும் அனைத்து

உயிருக்கும் தண்ணீர் முக்கியம் என்று கூறினார். மேலும் அனைத்து குவாரிகளையும் நிறுத்த வேண்டும் என்றார். மேலும் இத்திட்டம் அமைவது தொடர்பாக ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்த வேண்டும் என்று கூறினார்.

மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது): நீர் ஆதாரம் பெறுகிட பொதுமக்கள் அனைவரும் மரக்கன்றுகள் வளர்க்க வேண்டும் என்று கூறினார். பொதுமக்கள் தங்கள் கருத்துகளை பதிவு செய்துள்ளீர்கள். இவை அனைத்தும் பதிவு செய்யப்பட்டு ஆடியோ மற்றும் வீடியோ மற்றும் மனுக்கள் அனைத்தும் சென்னைக்கு அனுப்பப்படும் என்று தெரிவித்தார்.

இதனையடுத்து பொதுமக்கள் எவரும் கருத்துகள் கூற முன்வராததால் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறி நிறைவு செய்தார்.

இணைப்பு :

1. பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டோரின் பெயர் பட்டியல் (16 பக்கங்கள்: 137 நபர்கள்)
2. திட்ட உரை விளக்கக்காட்சி
3. பொது மக்களின் கருத்துக் கேட்புக் கூட்டம் தொடர்பாக பெறப்பட்ட மனுக்கள் - 36 எண்கள்
4. பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட ஒளிப்பதிவு குறுந்தகடு.

| | |
|---|---|
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>பெரம்பலூர் | மாவட்ட ஆட்சியர் நேர்முக<br>உதவியாளர் (பொது),<br>பெரம்பலூர் மாவட்டம். |